*Sri Lanka Journal of Social Sciences 2022* ***45*** *(1): 45-56*
DOI:https://dx.doi.org/10.4038/sljss.v45i1.8217

**RESEARCH ARTICLE**

# Ibn Khaldun's contribution and its criticism: a Sociological review

**Mohideenbawa Riswan***
*Department of Sociology, South Eastern University of Sri Lanka, University Park, Oluvil.*

**Abstract**:This article discussed that Ibn Khaldun contributed basic theories to sociology, four centuries prior to Auguste Comte. In the sociological discourse, a numerous attempts have been extensively made by the scholars to consider and study about Western sociologists' work, rather than that of theory and concept put forward by the Islamic Arab philosopher Inb Khaldun. This study analyzed the intellectual contribution of Ibn Khaldun to the field of sociology in 14th century. The major discussions have been made based on the secondary information, and result and finding were presented using interpretative method. The human civilization, social change, conflict, social integration (asabiyah), political organization, and theory of economic growth, transformation between rural and urban societies and cyclical theory of political system and government, were presented in this paper as a major contribution of Ibn Khaldun to the discipline of sociology. Further, this study described the legacy of his theories and criticisms made against his work. This study primarily has been undertaken to present intellectual sociological contribution of Ibn Khaldun.

**Keywords:** Ibn Khaldun, sociology, human civilization, Muqaddimah, Asabiyah, conflict, new science, social change.

**ஆய்வுச்சுருக்கம்:** ஆகஸ்ட் கொம்டேக்கு நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் சமூகவியலுக்குத் தேவையான அடிப்படைக் கோட்பாடுகளை இப்னு கல்தூன் விபரித்திருந்தமை பற்றி இக்கட்டுரை தெளிவாக கலந்துரையாடியுள்ளது. சமூகவியல் பரப்பில் இடம்பெறும் பல்வேறு கருத்தாடல்களுள் மேற்குலக அறிஞர்கள் முன்வைத்த கோட்பாடுகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட அளவுக்கு இஸ்லாமிய அரபுலக ஆய்வாளரான இப்னு கல்தூனின் எண்ணக்கருக்கள், கோட்பாடுகள் வாதிக்கப்பட்ட விதம், அதன் வீச்சு என்பன ஒப்பீட்டளவில் குறைவானது. இவ்வாய்வு, 14ஆம் நூற்றாண்டில் சமூகவியல் துறைக்கு இப்னு கல்தூனால் வழங்கப்பட்ட அறிவியல் பங்களிப்புக்கள் குறித்து பகுப்பாய்வு செய்துள்ளது. இரண்டாம் நிலை மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட தகவல்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள், பெறுகைகள் இதில் விபரிப்பு முறையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மனித நாகரீகம், சமூக மாற்றம், முரண்பாடு, சமூக ஒருமைப்பாடு, அரசியல் ஒழுங்கமைப்பு, பொருளாதார விருத்தி போன்ற கோட்பாட்டு ரீதியான பங்களிப்புக்கள், கிராமிய, நகர சமூகங்களின் கட்டமைப்புக்கள் மற்றும் அவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் என பல்வேறு அம்சங்கள் மூலம் சமூகவியலுக்கு இப்னு கல்தூன் பங்களிப்பு செலுத்தியிருந்தமை இவ்வாய்வில் முன்வைக்கப்பட்டுள்ளது. அத்துடன், இப்னு கல்தூனின் கோட்பாட்டு மரபும் அதன் மீதான விமர்சனங்கள் போன்றனவும் இக்கட்டுரையில் விபரிக்கப்பட்டுள்ளன. எனவே, இப்னு கல்தூன் தொடர்பான படைப்புக்கள் பெருவாரியாக இடம்பெற்றுள்ளதா எனும் கேள்வி ஒரு புறம் இருப்பினும், மறுபுறம் இவரின் சமூகவியல் பணி குறித்து தகவல்களை வழங்கும் ஒரு முக்கிய சமூகவியல் முயற்சியாக இக்கட்டுரை அமையப்பெற்றுள்ளது.

திறவுச்சொற்கள்: இப்னு கல்தூன், சமூகவியல், மனித நாகரீகம், முகத்திமா, அஸாபியாஹ், முரண்பாடு, புதிய விஞ்ஞானம், சமூக மாற்றம்.

## அறிமுகம்

சமூகவியல் ஏனைய விஞ்ஞானங்களை விட மிக இளமையான சமூக விஞ்ஞானமாகும். சமூகவியலானது 18ஆம் நூற்றாண்டில்

*Corresponding author (mriswan2008@seu.ac.lk https://orcid.org/0000-0002-8490-7886)

This article is published under the Creative Commons CC-BY-ND License (http://creativecommons.org/licenses/by-nd/4.0/).This license permits use, distribution and reproduction, commercial and non-commercial, provided that the original work is properly cited and is not changed anyway.

வளர்ச்சிபெற்று 19ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் தனித்துவமான, சுயாதீன துறையாக சமூக விஞ்ஞான குடும்பத்தில் (family of social science) அங்கீகரிக்கப்பட்டது. நவீன சமூகவியல் ஸ்தாபிக்கப்படுவதற்கு ஏதுவான சூழலை கைத்தொழில் புரட்சியும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சமூக மாற்றங்களும் உருவாக்கின. எனவே, கைத்தொழில் புரட்சி மற்றும் புதிய சமூக விஞ்ஞானத்தின் ஸ்தாபிப்பு ஆகிய இரண்டு நிகழ்வுகளும் ஐரோப்பிய மண்ணில் உருவாகும் வாய்ப்பு ஏற்பட்டது (Hodges, 1971). எனவே, சமூகவியல் 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு கற்கைத் துறை என்பதுடன், அது பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஆகஸ்ட் கொம்டே (1798-1857) எனும் தத்துவவியலாளரின் பங்களிப்பால் உருவானது எனவும் பொதுவாக நம்பப்படுகின்றது. எனினும், இக்கருத்திற்கு அப்பால் நின்று நோக்கும்போது, 14ஆம் நூற்றாண்டில் வட-ஆபிரிக்காவைச் சேர்ந்த இப்னு கல்தூன் (Ibn Khaldun) எனும் வரலாற்றாசிரியரின் பணிகளில் இருந்து பல்வேறு சமூகவியல் கருத்துக்கள் அவதானிக்கப்பட்டும் ஆராயப்பட்டும் வந்துள்ளன (Rameez, 2018:41).

ஐரோப்பிய சமூகவியலாளர்களைப் (Europe/Western Sociologists) பொறுத்தவரையில் இஸ்லாமிய ஆய்வாளரான இப்னு கல்தூன் தொடர்பில் பாரிய கருத்துநிலைகள் இல்லாவிட்டாலும், கீழைத்தேய சமூகவியலாளர்கள் (Eastern Sociologists) மத்தியில் இப்னு கல்தூனின் பங்களிப்புக்கள் குறித்த மதிப்பீடு, அங்கீகாரம் என்பன ஓரளவுக்கு உண்டு. எனினும் மேற்குலகு, இஸ்லாமிய அரபுலகத்தை அரசியல், ஆயுதம், எண்ணெய்வளம், பயங்கரவாதம் என பல கோணங்களில் நோக்குகின்ற அளவுக்கு அறிவியல் ரீதியான பங்களிப்புக்கள் தொடர்பில் நோக்குவது மிகக் குறைவாகும். இதனால்தான் அரபுலக இஸ்லாமிய அறிஞரான இப்னு கல்தூனின் அறிவியல், வரலாறு, பொருளியல், மற்றும் சமூகவியல் பங்களிப்புக்கள் வெளிக்கொண்டுவர எடுக்கப்பட்ட முயற்சிகள் ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளன. பெரும்பாலான கீழைத்தேய சமூகவியலாளர்களும் ஆகஸ்ட் கொம்டேயின் பங்களிப்பை ஏற்றுக்கொண்ட அளவுக்கு அல்லது அங்கீகரித்த அளவுக்கு இப்னு கல்தூனின் சமூகவியல் பணிக்கு கொடுத்திருக்கும் அங்கீகாரம் எத்தகையது என்பது சமூகவியல் தளத்தில் நின்று கேட்கப்படும் பொதுவான கேள்வியாகும், அதற்கான விடையை ஆராய்ந்து அறிவதும் மிக அவசியமான ஒன்றாகும்.

18, 19ஆம் நூற்றாண்டுகளில் சமூகவியலுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம், சமூகவியலின் வளர்ச்சிக்கு அடித்தளமிட்ட சிந்தனையாளர்களின் பணிகள் பல்வேறு படித்தரங்களிலும் கலந்துரையாடப்பட்டு வருகின்றன. எனினும், சமூகவியல் எண்ணக்கருக்களுக்கு 14ஆம் நூற்றாண்டு தூவப்பட்ட விதைகள் பற்றிய அவதானம், கலந்துரையாடல், ஆய்வுகள் என்பன ஒப்பீட்டளவில் குறைவாகவே எழுந்துள்ளன. கைத்தொழில் புரட்சிக்கு பிற்பட்ட நவீன சமூகத்தில் உருவான புதிய சமூக விஞ்ஞானமாகிய சமூகவியல் மீது அதிகமான சமூக விஞ்ஞானிகள் காட்டும் அக்கறை ஏன் 14ஆம் நூற்றாண்டில் கல்தூன் முன்வைத்த சமூகவியல் படிமங்கள் மீது செலுத்தப்படவில்லை எனும் கேள்வியும் பொதுவாக எழுவதுண்டு. அத்துடன், இப்னு கல்தூன் இஸ்லாமிய அரபுலகைச் சேர்ந்தவர் என்பதனால், அவர் கைத்தொழில் புரட்சிக்கு முந்திய மத்தியகாலத்தில் வாழ்ந்தவர் என்பதனால் அவரின் கருத்துக்களை சமூகவியலாளர்கள் ஆழமாக நோக்காதுள்ளனரா எனும் வேறு சில கேள்விகள் எழுகின்றன. இதனைத் தாண்டி, ஐரோப்பிய-மையவாதம் (Eurocentrism) காரணமாக வட-ஆபிரிக்க அறிஞரின் சிந்தனைகள் மறைக்கப்பட்டனவா எனும் கேள்வி தொடர்பிலும் பல்வேறு கருத்துக்கள் புலமையாளர்களால் விவாதிக்கப்பட்டும் வருகின்றன. அத்தகைய கேள்விகளின் பின்புலத்தில், இக்கட்டுரையானது, 14ஆம் நூற்றாண்டில் இப்னு கல்தூன் முன்வைத்த அறிவியல் பங்களிப்புக்கள், குறிப்பாக சமூகவியல் பணிகள் பற்றிய மீளாய்வினை மேற்கொண்டுள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

றொசென்தால் (2005) என்பவர் இப்னு கல்தூனின் பிரபல்யமான படைப்பான 'முகத்திமா' (Muqaddimah) எனும் நூலை ஆங்கிலத்தில் '*Ibn Khaldun: The Muqaddimah – An Introduction to History*' என மொழிபெயர்ப்பு செய்துள்ளார். இம்மொழிபெயர்ப்பு நூல், கல்தூனியக் கோட்பாடுகளும் கருத்துக்களும் ஏனைய (கிழக்கு, மேற்கு) ஆய்வாளர்களால் நோக்கப்படுவதற்கும் எடுத்தாராயப்படுவதற்கும் காரணியாய் அமைந்தது. ஏனெனில், இஸ்லாமிய அரபுலக அறிவியல் பங்களிப்புக்கள் பெரும்பாலும் அரபு மொழியில் அமையப்பெற்றன. இதனால்கூட அரபுலக படைப்புக்கள் மேற்குல கவனயீர்ப்பை பெறுவதில் சிக்கலை உருவாக்கியிருக்கலாம். எனவே, றொசென்தால் (Rosenthal, 2005) மொழிபெயர்த்த இந்நூல் பல்வேறு ஆய்வாளர்களும் இப்னு கல்தூன் பற்றியும் அவரின் வரலாற்று, சமூகவியல், பொருளியல், அரசியல் பங்களிப்புக்கள் குறித்தும் புரிந்துகொள்வதற்கு ஏதுவாக அமைந்தது எனக்கூறலாம்.

பரீடா எச்ஜே ஹஸ்ஸன் (2006) மேற்கொண்ட '*Ibn Khaldun and Jane Addams: The Real Father of Sociology and the Mother of Social Works*' எனும் ஆய்வு இப்னு கல்தூனின் பங்களிப்பு தொடர்பில் அதிகம் கலந்துரையாடியுள்ளது. இக்கட்டுரையானது, சமூகவியலையும் அதன் வரலாற்றுப் பின்னணியையும் வரையறை செய்துள்ளதுடன், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சமூகவியலின் ஸ்தாபகர்கள் பற்றியும் விபரித்துள்ளது. சமூகவியலின் ஆரம்ப ஸ்தாபகத் தந்தை எனும் அடிப்படையில் 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இஸ்லாமிய புலமையாளர் இப்னு கல்தூன் சமூகத்துக்கு ஆற்றிய பங்களிப்பின் முக்கியத்துவம் பற்றி நோக்கியுள்ளது. இஸ்லாமிய அரபுலக வரலாற்றில் சமூகவியல் துறையில் இப்னு கல்தூன் மிக முக்கியமானவராக கருதப்படுகின்றார் என்பதை இக்கட்டுரை முடிவுரைத்துள்ளது (Hassan, 2006).

கரோலின் ஸ்டோன் (2006) தனது '*Ibn Khaldun and the Rise and Fall of Empires*' எனும் ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிடுகையில், அப்துல் றஹ்மான் இப்னு முஹம்மட் இப்னு கல்தூன் அல்-ஹட்ராமி என்பவர் 14ஆம் நூற்றாண்டின் திறமை மிக்க வரலாற்றாசிரியர் ஆவார். இவர் நவீன வரலாற்றியல்,

சமூகவியல், பொருளியல் துறைகளின் தந்தையாக பார்க்கப்பட்டார் எனக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், கல்தூனின் 'முகத்திமா' (Muqaddimah) உள்ளிட்ட ஏனைய சித்தாந்தங்களும் அரபுலக சாம்ராஜ்ஜிய அரசியல், சமூக மாற்றங்கள் தொடர்பில் எத்தகைய தாக்கங்களை உண்டாக்கியது என இக்கட்டுரையில் மதிப்பீடு செய்துள்ளார் (Stone, 2006).

அதேபோன்று, சோயர் மற்றும் கில்பேர்ட் (2012) என்போர் தமது *'Debating the Origins of Sociology: Ibn Khaldun as a Founding Father of Sociology'* எனும் ஆய்வில் இப்னு கல்தூனை சமூகவியலின் ஸ்தாபக தந்தையாக கருதமுடியுமா என ஆராய்ந்து கருத்துக்களை முன்வைத்துள்ளனர். இதில், இஸ்லாமிய அரபுலக சிந்தனையாளர் இப்னு கல்தூனின் சமூகவியல் பங்களிப்புக்களை மேலைத்தேய சமூகவியல் அறிஞர்களான ஆகஸ்ட் கொம்டே, எமில் துர்க்கைமின் கோட்பாடுகளுடன் ஒப்பீட்டாய்வு செய்துள்ளனர் (Soyer & Gilbert, 2012).

அபூபக்கர் றமீஸ் (2018) தனது *'Eurocentrism and the Contribution of Ibn Khaldun to the Growth of Sociology'* எனும் ஆய்வுக்கட்டுரையில் ஐரோப்பிய புலமையாளர்கள், ஐரோப்பியர்-அல்லாத சமூகத்தின் (Non-european society) மொழி, கலாச்சாரம் போன்ற அம்சங்கள் பற்றிய குறுகிய எண்ணம் கொண்டவர்களாகவும் ஐரோப்பிய-மையவாத (Eurocentric) சிந்தனை கொண்டவர்களாகவும் காணப்பட்டனர் என வாதிடுகின்றார். அத்துடன், இப்னு கல்தூன் சமூகம், மனிதப் பண்பு, அரசியல் ஒழுங்கமைப்பு, அரசாங்கம், கிராமிய-நகர சமூகங்களிடையிலான வேறுபாடு, உறவுமுறை, சமூக ஒருமைப்பாடு (*Asabiyah*), பொருளாதார முறைமை போன்ற பல்வேறு விவகாரங்கள் குறித்து பங்களிப்புச் செய்திருந்தும்கூட, அவரின் சமூகவியல் துறைக்கான இத்தகைய பணி பரந்தளவில் (ஐரோப்பாவில்) நிராகரிக்கப்பட்டிருந்தது (Rameez, 2018) எனும் வாதத்தையும் கட்டுரையாசிரியர் முன்வைத்துள்ளார்.

மேலும், றிட்செர் (2015) தனது *'Introduction to Sociology'* எனும் நூலில், 14ஆம் நூற்றாண்டில் அப்துல் றஹ்மான் இப்னு கல்தூன் என்ற முஸ்லிம் புலமையாளர் அரசியல், பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு சமூக உறவு முறைகள் பற்றி ஆராய்ந்துள்ளதாக குறிப்பிடுகின்றார். எனினும், சமூகவியலை ஸ்தாபிப்பதற்குரிய காலமாக அமைந்தது 18ஆம், 19ஆம் நூற்றாண்டின் கைத்தொழில் புரட்சியாகும் (Ritzer, 2015).

அதேபோல், 14ஆம் நூற்றாண்டில் இருந்து இஸ்லாமிய சமூகவியல் பங்களிப்புக்கள் இருந்தமைக்கான ஆதாரங்கள் உள்ளன என்று சாவான் மற்றும் சோனாவானே (2017) தமது *'Basic Concepts in Sociology'* எனும் நூலில் குறிப்பிட்டுள்ளனர். மேலும் விளக்குகையில், இப்னு கல்தூன் (1332-1406) என்பவர் தனது 'முகத்திமா' (*Muqaddimah)* (later translated as *Prolegomena* in Latin: The Introduction) எனும் நூலில் ஏழு பெரும் பகுதிகள் கொண்டு பூகோள வரலாற்றை பகுப்பாய்வு செய்துள்ளார். இந்நூல்தான் வரலாற்றில் முரண்பாடு, சமூக நல்லிணக்கம் போன்ற கோட்பாடுகளை சமூக விஞ்ஞான, சமூக மெய்யியல் துறைகளுக்கு முதன் முதலில் வழங்கியது. ஆரம்ப இஸ்லாமிய சாம்ராஜ்ஜியங்களில் வாழ்ந்த பலதரப்பட்ட மக்களை அல்லது குழுக்களை ஒரு அரசியல் ஒழுங்கமைப்புக்குள் கொண்டுவரும் பொறுப்பு சமூகவியலுக்கு இருந்தது. இஸ்லாமிய ஆட்சியாளர்களான (Islamic Caliphate) றாசிதூன், உமையாக்கள், அப்பாசியர்கள் மற்றும் எகிப்திய மம்லூக் ஆட்சி காலத்திலும் (Rashidun, Umayyad, Abbasid, and the Mamluk period in Egypt) இத்தகைய இஸ்லாமிய தத்துவார்த்த, விஞ்ஞான அறிவியல் கருத்துக்கள் வேரூன்றியிருந்தபோது கல்தூனின் சமூகவியல் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன என இந்நூலாசிரியர்கள் பதிவுசெய்துள்ளனர் (Chavan & Sonawane, 2017:3).

மீளாய்வுக்குட்படுத்திய நூல்கள், கட்டுரைகளின் அடிப்படையில் நோக்கும்போது, இப்னு கல்தூனின் கோட்பாட்டுகள் சமூகவியல் மரபில் பல்வேறு காலகட்ட அறிஞர்களாலும் எடுத்தாராயப்பட்டுள்ளன. எனினும், இப்னு கல்தூன் பற்றியும் அவரின் சமூகவியல் பங்களிப்புக்கள், சமூக-பொருளாதார, அரசியல் கருத்தியல்கள் குறித்தும் பகுப்பாய்வு செய்து ஓர் அடிப்படை விபரத்தை வழங்கவேண்டிய தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இவ்வாய்வுக் கட்டுரை பல்வேறு தகவல்களை, மூலாதாரங்களைக் கொண்டு ஆவணப்படுத்த முயற்சித்துள்ளது. சமூகவியல் குறித்த பல முக்கிய கருத்தாடல்கள் சுதேச மொழியில் இடம்பெற வேண்டியது காலத்தின் தேவையாகும்.

**ஆய்வின் நோக்கமும் முறையியலும்**

சமூகவியலின் தோற்றம், வளர்ச்சி பற்றிய ஐரோப்பிய (மேலைத்தேய) கண்ணோட்டம் 18, 19ஆம் நூற்றாண்டுகளின் தத்துவவியலாளர்களின் பங்களிப்புக்களின் ஊடாக நோக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னரே 14ஆம் நூற்றாண்டில் இஸ்லாமிய அரபுலக (கீழைத்தேய) ஆய்வாளர்களின் பங்களிப்புக்கள் ஆரம்ப சமூகவியலுக்கு விதைகளைத் தூவியுள்ளன. எனினும், மேலைத்தேய அறிஞர்களான ஆகஸ்ட் கொம்டே (Auguste Comte), ஹேர்பட் ஸ்பென்சர் (Herbert Spencer), எமில் துர்க்கைம் (Emile Durkheim), மக்ஸ் வெபர் (Max Weber), கார்ல் மார்க்ஸ் (Karl Marx) போன்றவர்களின் கோட்பாடுகள் மீது செலுத்தப்பட்ட அவதானம் அரபுலக வரலாற்றாசிரியர், சமூகவியலாளர் என வர்ணிக்கப்படும் இப்னு கல்தூனின் (Ibn Khaldun) பங்களிப்புக்கள் மீது எந்தளவுக்கு செலுத்தப்பட்டது என்பது பொதுவான வினாவாகும். எனவே இவ்வாய்வு, இஸ்லாமிய அரபுலக சிந்தனையாளர் இப்னு கல்தூன் 14ஆம் நூற்றாண்டில் சமூகவியலுக்கு எத்தகைய பங்களிப்புக்களைச் செலுத்தியுள்ளார் என்பதை அடையாளப்படுத்துவதை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது. அத்துடன், கல்தூனின் கோட்பாட்டு மரபும் அதில் முன்வைக்கப்பட்ட விமர்சனங்களும் பகுதியளவில் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன.

இது அடிப்படையில் ஒரு பண்புசார் ஆய்வாகும். களப்பணி போன்ற முதலாம் நிலைத் தரவுகள் எதுவுமின்றி, இதில் முழுமையாக

இரண்டாம் நிலைத் தகவல்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளன. பல்வேறு ஆய்வாளர்களினால் பிரசுரிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் மூலம் இப்னு கல்தூனின் பிரதான அறிவியல் பங்களிப்பு குறித்த தகவல்கள் பெறப்பட்டுள்ளன. அத்துடன், அவரின் வாழ்க்கைக் குறிப்பு மற்றும் பொருளியல், சமூகவியல், வரலாற்று பங்களிப்புக்கள் பற்றிய தகவல்கள் இணையவழித் தரவுகள் மூலமும் முன்னைய ஆய்வுகளின் மூலமும் பெறப்பட்டுள்ளன. குறிப்பாக, பிரான்ஸ் றொசென்தால் (2005), பரீடா எச்ஜே ஹஸ்ஸன் (2006), கரோலின் ஸ்டோன் (2006), சோயர் மற்றும் கில்பேர் (2012), அபூபக்கர் றமீஸ் (2018) போன்ற பலரின் ஆய்வுக் கட்டுரைகள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு இவ்வாய்வுக்குத் தேவையான பிரதான பகுப்பாய்வு, கலந்துரையாடல் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆய்வின் பெறுகைகள், கலைந்துரையாடல் உட்பட அனைத்து விடயங்களும் விபரிப்பு முறையில் (interpretative method) இதில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**இப்னு கல்தூன் (1332-1406): பின்னணி**

இப்னு கல்தூன் 1332 மே மாதம் 27ஆம் திகதி துனூசியாவில் (Tunis [Tunusia]) பிறந்தார் (Encyclopaedia Britannica; May 23, 2020). நவீன சமூக விஞ்ஞானத்தின் பண்பாட்டு வரலாற்றியலின் (Cultural History) தந்தையாகவும் குறிப்பிடப்படுகின்றார். இவர் அந்தலூசியன் (*Andalusian*) எனும் உயர் வகுப்பு குடும்பத்தைச் சேர்ந்தவர். வட-ஆபிரிக்காவில் தலைசிறந்த ஆசிரியரிடம் கல்வி கற்ற இவர் (Hassan, 2006:5) பாரம்பரிய அரபுக் கல்வி, குர்ஆன் மற்றும் அரபு மொழியியலையும் (Quran and Arabic Linguistic) கற்றார். அரபு மொழியியல் மூலம் குர்ஆன், ஹதீஸ், இஸ்லாமிய சட்டம் (Saria), பிக்ஹ் (Jurisprudence) என்பவற்றை நன்கு புரிந்திருந்தார். இவருக்கு கணிதவியல், தர்க்கவியல், மெய்யியல் (Mathematics, Logic and Philosophy) அறிவியல் துறைகள் அல்-ஆலிபி (Al-Alibi) எனும் தத்துவவியலாளரால் அறிமுகப்படுத்தப்பட்டன (Hozien, 2013).

துனுசியாவில் 1349ல் ஏற்பட்ட தொற்று நோய்ப் பரவலினால் தனது 17வது வயதில் பெற்றோர்கள் இருவரையும் கல்தூன் இழந்தார் (Stone, 2006). கல்தூன் தனது வாழ்நாளின் அதிகமான நாட்களை வட-ஆபிரிக்காவிலும் ஸ்பெயினிலும் கழித்திருந்தார். இவர் அந்தலூசியா குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதனால் முஸ்லிம்களின் பிரதான கருத்தியல் நீரோட்டத்திலிருந்து இவரின் கண்ணோட்டம் வேறுபட்டதாகவே அமைந்திருந்தது (Alatas, 2007). எனினும், தனது 20வது வயதில் அரசியல் பணியினை துனுசியா ஆட்சியாளரின் வேந்தரியல் பிரிவில் (Chancellery Division) பொறுப்பேற்றார். கத்தீப் அல்-ஆலாமா (*Katib al-álamah*) எனும் பதவியில் இருந்து அரச தகவல் ஏடுகளுக்கு (Information records) உரிய கையெழுத்துக் கலையினைப் பிரயோகித்ததன் மூலம் முக்கியமான அரசியல் பணியில் ஈடுபட்டிருந்தார். 1377ல், மிகக் குறுகிய காலத்துக்குள் (ஐந்து தொடக்கம் ஆறு மாதங்களுக்குள்) 'முகத்திமா' (Muqaddimah *[Historical Prolegomenon]* (*The Introduction)*, 1377) எனும் நூலை எழுதினார் (Zaidi, 2011; Stone, 2006 & Enan, 1979). இதன் மூலம் அவர் சமூகவியல், வரலாற்றியல், பொருளியல் துறைகளுக்குத் தேவையான பல கோட்பாடுகளை முன்வைத்து வரலாற்றில் இடம்பிடித்தார்.

இப்னு கல்தூனின் வாழ்க்கை பல வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புபட்டதாகும். அதனால் அவரது கோட்பாடு சிறந்த கருத்துக்களையும் யதார்த்த வடிவினையும் கொண்டிருந்தது. ஒவ்வொரு கோட்பாட்டையும் முன்வைப்பதில் வரலாற்றியல் நிகழ்வுகளின் சான்றுகள் இளையோடியிருப்பதனை அவதானிக்கலாம். குறிப்பாக சமூக மாற்றம், சமூக ஒருங்கிணைவு (*Asabiyah*) பற்றிய இவரது கருத்துக்கள் வரலாற்றில் கிராமிய, நகர சமூகங்களிடையே ஏற்பட்ட பாரிய அசைவுகளைப் பற்றி பேசுவதாய் அமைந்துள்ளன. அத்துடன், வரலாற்றில் அரசியல் அதிகாரம், அதிகாரக் குழுக்கள், அதிகாரத்துக்கான போட்டி, ஆட்சியாளர்களின் (அரசுகளின்) உருவாக்கம், வளர்ச்சி, வீழ்ச்சி போன்ற பல விவகாரங்களை வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்தி கல்தூன் விபரித்துள்ளார்.

ஆகஸ்ட் கொம்டே (1798-1857) பிரதானமாக பல கோட்பாடுகளை, குறிப்பாக, விஞ்ஞானங்களின் படிமுறைகள் (hierarchy of sciences), புறமெய்மைவாதம் (positivism), மானிடத்தின் சமயம் (religion of humanity) போன்றவற்றை முன்வைத்ததைத் தொடர்ந்து நவீன சமூகவியலின் தந்தை என அங்கீகாரத்தைப் பெற்றார். எனினும், மறுபுறம் சில ஆய்வாளர்கள், சமூகவியலின் ஸ்தாபக தந்தை இப்னு கல்தூன் எனவும் வாதிடுகின்றனர். ஏனெனில், ஆகஸ்ட் கொம்டே சமூகவியலை ஒருங்கிணைப்பதற்கு நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் சமூகவியலுக்குத் தேவையான அடிப்படை விடயங்களை இப்னு கல்தூன் முன்வைத்துள்ளார் என்பது இவர்களின் வாதமாகும். எனவே, இத்தகைய அடிப்படையில் 14ஆம் நூற்றாண்டில் பல்வேறு பணிகள் மூலம் புலமையாளராகக் கருதப்பட்ட இப்னு கல்தூன் 1406 மார்ச் மாதம் 17ஆம் திகதி எகிப்தில் உள்ள கைறோவில் (Cairo, Egypt) இறப்பைத் தழுவினார் (Encyclopaedia Britannica; May 23, 2020).

எவ்வாறிருப்பினும், மேலைத்தேய புலமைத்துவத்துக்கும் கீழைத்தேய அறிவியல் பங்களிப்புக்குமான வேறுபாடுகள் பல வடிவங்களில் அமைந்திருந்தன. இப்னு கல்தூனின் கோட்பாடுகள் முன்னுரிமைப்படுத்தப்படாமைக்கு பல்வேறு காரணிகள் பின்னணியாய் இருந்ததாக சில ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். குறிப்பாக, மேலைத்தேய சமூகவியல் முன்னுரிமைப்படுத்தப்படுவதற்கு ஐரோப்பிய-மையவாதம் (Eurocentrism) ஒரு முக்கிய காரணியாக அமைந்துள்ளது. ஐரோப்பிய மையவாதமானது மேலைத்தேய புலமைத்துவ மரபுடன் இணைந்த ஒரு பகுதியாகவே காணப்பட்டது. இதனால் மேலைத்தேய நாகரீகத்தின் மேலாண்மை காரணமாக புலமைத்துவ மரபிலும் மேலைத்தேயம் கீழைத்தேயம் என இரு வேறு பார்வைகள் உருவாகின (Alatas, 2007). தற்போதைய சூழலிலும் இப்னு கல்தூன் முதன்மைப்படுத்தப்படுவதை விடவும் ஆகஸ்ட் கொம்டே முதன்மைப்படுத்தப்படுவதற்கு இதுவே காரணமாகவும் அமைந்தது என பல அறிஞர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்குலக நாகரீகமயமாதல் மற்றும் நவீனத்துவம் (Western civilization and modernity) போன்றன ஐரோப்பிய-மையவாதப் போக்கினை முதன்மைப்படுத்தியதுடன், மேற்குலகு-சாராத பண்பாடுகள் மற்றும் நாகரீகங்கள் (Non-western culture and civilization) மீதான பார்வையும் கீழைத்தேய புலமையாளர்களின் அறிவியல் பங்களிப்புகளை ஏற்கவோ அங்கீகரிக்கவோ முடியாத நிலையை தோற்றுவித்துள்ளது (Rameez, 2018).

பிரான்ஸ் தத்துவவியலாளர் கொம்டேயினுடைய பங்களிப்பில் சமூகவியல் எனும் தனிப்பெரும் துறை ஐரோப்பாவில் 19ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றதாக பொதுவாக நம்பப்படுகின்றது. எனினும், சமூகவியல் பார்வையில் (சமூகவியல்சார்) அதிகமான எண்ணக்கருக்கள் 14ஆம் நூற்றாண்டில் வட ஆபிரிக்க வரலாற்றியலாளர், மெய்யியலாளர் இப்னு கல்தூனின் பணிகளில் அவதானிக்கப்பட்டுள்ளன. இப்னு கல்தூன் முக்கியமான புலமையாளராக இருந்தபோதிலும்கூட, அவரது கருத்துக்கள் ஐரோப்பிய புலமையாளர்களின் பணிகளில் பரந்தளவில் நிராகரிக்கப்பட்டுள்ளன அல்லது கவனத்தில் கொள்ளப்படாதிருந்தன எனும் கருத்து நிலவுகின்றது. குறிப்பாக, மேற்குலகில் உள்ள புலமைமையாளர்களின் பணிகளில் கல்தூனின் கோட்பாடுகள் புறமொதுக்கப்பட்டு உள்ளன (Rameez, 2018) எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம்.

**இப்னு கல்தூன் தொடர்பிலான அண்மைய முன்னெடுப்புக்கள்**

கடந்த பல வருடங்களாக இப்னு கல்தூன் பற்றிய பொதுவான அங்கீகாரம் அதிகரித்து வருகின்றது. 2004ல், துனுசியா சமுதாய மையம் (Tunisia Community Center) முதலாவது இப்னு கல்தூன் விருது (Ibn Khaldun Award) ஒன்றை அறிமுகம் செய்தது. இதன் மூலம் கல்தூன் முன்வைத்த உறவுமுறை மற்றும் ஒருமைப்பாடு (Kinship and Solidarity) பற்றிய கோட்பாடுகளை பிரதிபலிக்கும் ஆய்வுகளில் உயர் அடைவு மட்டத்தை அடையும் துனுசியன்/அமெரிக்கன் (Tunisian/American) மாணவர்களை கௌரவிப்பதற்கு இவ்விருது அறிமுப்படுத்தப்பட்டது. 2006ல், அட்லஸ் பொருளாதார ஆய்வு ஸ்தாபனம் (Atlas Economic Research Foundation) வருடாந்த கட்டுரைப் போட்டி நடாத்தி அதில் வெற்றி பெறுவோருக்கு ‘இப்னு கல்தூன் விருது’ வழங்கப்பட்டுவருகின்றது (Web: Ibn Khaldun; 15 Oct, 2020).

அதேபோன்று 2006ல் ஸ்பெயின், கல்தூன் இறந்த 600வது சிரார்த்த தினத்தை நினைவுகூர்ந்து அதற்கு ‘நாகரீகத்துடன் மோதியவர்: இப்னு கல்தூன்’ (Encounter of Civilization: Inb Khaldun) என அவரின் பெயரை கருப்பொருளாக பொறித்தது (United Nation, 2006 & Website: Ibn Khaldun; 15 Oct, 2020). 2011ல், இப்னு கல்தூனின் பிறந்த தினம் கூகிள் டூடில் (google doodle) மூலம் அங்கீகரிக்கப்பட்டது. அது அவரை வட-ஆபிரிக்காவிலும் அராபிய தீபகற்பத்திலும் பிரபல்யப்படுத்தியது. 2007ல், இப்னு கல்தூன் பெயரை நினைவுகூரும் முகமாக இப்னு ஹல்தூன் பல்கலைக்கழகம் (Ibn Haldun Univesity) துருக்கியின் இஸ்தான்பூலில் நிறுவப்பட்டது (Website: Ibn Khaldun; 15 Oct, 2020).

இத்தகைய அடிப்படையில் பல்வேறு நிலைகளிலும் நினைவுகூரும் விதமாக தனக்கென்று ஒரு அறிவியல் தடத்தை பதிந்துகொண்ட கல்தூன், ஒரு சிறந்த வரலாற்றாய்வாளராக, சமூகவியலாளராக, மறுமலர்ச்சியாளராக இஸ்லாமிய அரபுலக வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவேதான் இக்கட்டுரையானது கல்தூனின் பிரதான அறிவியல் பங்களிப்புக்கள், அவரின் கோட்பாட்டு மரபும் அதன் மேலெழுந்த விமர்சனங்கள் பற்றியும் விரிவாக ஆராய்ந்துள்ளது.

**பெறுபேறும் கலந்துரையாடலும்**

இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கங்களை அடையும் பொருட்டு இப்பகுதியில் இப்னு கல்தூன் முன்வைத்த பிரதான கோட்பாடுகள், எண்ணக்கருக்கள் தகுந்த சான்றாதாரங்களுடன் நோக்கப்பட்டுள்ளன. அத்துடன், கல்தூனின் கருத்துக்கள் தொடர்பில் பின்பற்றப்பட்ட மரபுகள் மற்றும் அவரின் அறிவியல் பங்களிப்புக்கள் மீதெழுந்த விமர்சனங்கள் பற்றியும் சுருக்கமாக கலந்துரையாடப்பட்டுள்ளன. கட்டுரையின் இரண்டு நோக்கங்களும் தனித்தனியாக எடுத்தாராயப்பட்டுள்ளன.

**நோக்கம் 01: இப்னு கல்தூன் சமூகவியல் கோட்பாடுகள் தொடர்பில் ஆற்றிய பணியை விபரித்தல்**

**இப்னு கல்தூனின் சமூகவியல் பணிகள்**

மேலைத்தேய உலகில் மட்டுமல்ல பெரும்பாலான சமூக விஞ்ஞான ஆய்வாளர்கள் மத்தியில் இப்னு கல்தூன் எனப்படும் ஒரு ஆளுமை பற்றிய மதிப்பீடுகள் குறைவாகவே இருக்கும். எனினும், சில ஆய்வாளர்கள் இப்னு கல்தூனுக்கும் 21ஆம் நூற்றாண்டின் சமூக விவகாரங்களுக்கும் ஏதாவது தொடர்புண்டா எனவும் சிந்திக்கின்றனர். எப்படியிருப்பினும், ஆரம்பகால சமூக சிந்தனையாளர்கள், கல்தூன் சமூகவியலின் ஸ்தாபகர் எனவும் குறிப்பிடுகின்றனர் (Cited in: Soyer & Gilbert, 2012). சொறோகின், சிம்மமேன், கல்பின் போன்றோர், இப்னு கல்தூன் ஒரு வரலாற்றாசிரியர், அரசியல்வாதி, சமூகவியலாளர் மற்றும் ‘சமூகவியலின் ஸ்தாபகர்’ என நம்பினார்கள். இவர்களின் கூற்றின்படி, கல்தூன் அராபிய சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி விபரித்துள்ளதுடன், அச்சமூகம் கிராமிய கட்டமைப்பிலிருந்து நகர சமூகக் கட்டமைப்புக்குள் எவ்வாறு நகர்ந்தது (Transformation of Arab society from *Badawa* [rural society] to *Hadara* [urban society]) என்பது பற்றியும் பகுப்பாய்வு செய்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (Alatas, 2013).

ஹரி பார்னஸ், ஹொவார்ட் பெக்கர் (Harry Barnes and Howard Becker) ஆகியோர் தமது *‘Social Thought: From Lore to Science’* எனும் நூலில் குறிப்பிடும்போது, வரலாற்றுச்

சமூகவியலுக்கு (historical sociology) நவீன கருத்துக்களை உட்செலுத்தியது ஐரோப்பியர்கள் அல்ல, ஆனால் அவர்கள் இப்னு கல்தூனின் கலைந்துரையாடல்களில் இருந்து சமூக விஞ்ஞானத்துக்கு தேவையான தகவல்களைப் பெற்றிருந்தனர் என விவாதித்தனர் (Barnes & Becker, 1938:366. Cited in: Soyer & Gilbert, 2012:13). இவர்களின் கருத்துக்களின் ஊடாக நோக்கும்போது, வரலாற்றுச் சமூகவியலுக்கு முதன் முதலாக நவீன கருத்துக்களை பிரயோகித்தவர் இப்னு கல்தூன் ஆவார், இதனால் கல்தூன் சமூகவியலின் ஸ்தாபகராக காணப்படுகின்றார் எனும் கருத்தினை முன்வைக்கின்றமையைக் காணமுடிகின்றது. எனினும் துரதிக்ஷ்டவசமாக, 19ஆம் நூற்றாண்டு வரைக்கும் கல்தூனிய சமூகவியல் மேலைத்தேய புலமையாளர்களால் அறியப்படாமல் இருந்தது. 19ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் மேற்கத்தேய அறிஞர்கள் கல்தூனையும் அவரின் கோட்பாடுகளையும் ஆராயத் தொடங்கினர். மக்கியவல்லி (Machiavelli), மொன்டஸ்கியு (Montesquieu), அடம் ஸ்மித் (Adam Smith), ஆகஸ்ட் கொம்டே (Auguste Comte) போன்றவர்களுக்கு சில நூற்றாண்டுகளுக்கு முன்பே கல்தூன் பல்வேறு கோட்பாடுகளை விருத்தி செய்தார். கல்தூனையும் அவரின் கோட்பாடுகளையும் ஆராய்ந்த பின்னரே மேலைத்தேய புலமையாளர்கள் இப்னு கல்தூன் ஒரு தத்துவவியலாளர், வரலாற்றாசிரியர், சமூகவியல் புலமையாளர் மற்றும் அரசியல்-பொருளியலாளர் (political-economist) என கவனத்தில் கொண்டனர் (Enan, 1979).

கல்தூன் (1377) எழுதிய 'முகத்திமா' (Muqaddimah, [*The Introduction*]) எனும் நூலானது மேலைத்தேய சமூகவியல் விருத்தியடைவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே எழுதியதாகும். கல்தூன் இந்த நூலில் நவீன சமூகவியலில் காணப்பட்ட அடிப்படைப் பிரச்சினைகளை விபரித்திருந்தார், குறிப்பாக, குறைவிருத்தியுள்ள சமூகங்கள் எவ்வாறு முன்னேற்றமடைந்த சமூகங்களாக பரிமாணம் அடைகின்றன என கலந்துரையாடியுள்ளார். வரலாற்றில் கல்தூனின் பணிகளில் சில பகுதிகள் நவீன முறையியலாகவே காணப்பட்டன (Sorokin, 1947: Cited in: Soyer & Gilbert, 2012 ). இப்னு கல்தூன் அடிப்படையிலேயே ஒரு இஸ்லாமிய அரபுப் புலமையாளர் (Arab Scholar of Islam) ஆவார் (Hozien, 2013). அத்துடன், அவர் ஒரு சமூக விஞ்ஞானியாகவும் வரலாற்றாசிரியராகவும் (Sarah-Bowen & Felipe, *eds.,* 2014) காணப்படுவதோடு, வரலாற்றியல், சமூகவியல், பொருளியல், குடித்தொகையியல் போன்ற பல துறைகளின் தந்தையாகவும் கருதப்படுகின்றார் (Spengler, 1964; Boulakia, 1971 & Sorinel, 2009). மத்தியகால ஐரோப்பாவில் வாழ்ந்த மிக முக்கியமான தத்துவவியலாளராக கல்தூன் காணப்படுகின்றார். அத்துடன் அவரின் பணிகள் பரந்தளவில் அங்கீகரிக்கப்பட்டது என மறுமலர்ச்சிக் காலத்திலிருந்த மக்கியவல்லி (Machiavelli) மற்றும் 19ஆம் நூற்றாண்டின் ஐரோப்பிய புலமையாளர்கள் விளக்கினர். கல்தூனின் மிகப் பிரபல்யமான படைப்பான 'முகத்திமா'வை அவர் ஆறு மாதங்களுக்குள் எழுதியதாக தனது குறிப்பேட்டில் பதிவுசெய்துள்ளார் (Zaidi, 2011).

இப்னு கல்தூன், சமூகம் தொடர்பான அடிப்படைக் கோட்பாடுகளை 14ஆம் நூற்றாண்டிலேயே முன்வைத்தார். சமூக ஒருமைப்பாடு மற்றும் அரசுகளின் எழுச்சி, வீழ்ச்சி பற்றியும் இவர் ஆராய்ந்துள்ளார். உலக இஸ்லாமிய வரலாற்றில் இப்னு கல்தூன் மிக முக்கியமான நபராகக் கருதப்படுகின்றார் (Enan, 1979). கல்தூன் மீது அதிக பார்வை செலுத்தப்படுவதற்கு அவர் எழுதிய 'முகத்திமா' (Muqaddimah) எனும் நூல் பிரதான காரணியாய் அமைந்திருந்தது. கல்தூன் ஆய்வு செய்த சமூகக் கோட்பாடுகளான சமூக ஒருங்கிணைவு, அரசுகளின் எழுச்சி, சிதைவு என்பன முகத்திமாவில் விளக்கப்பட்டுள்ளன. சமூக விவகாரங்களின் போக்கையும் அதன் வடிவங்களையும் வரலாற்று நிகழ்வுகளின் ஊடாக பார்வையை செலுத்தி கல்தூன் தனது முகத்திமாவில் பதிவுசெய்துள்ளார் (Enan, 1979).

சாதி அல்-ஹுஸ்ரி (Sati Al-Husri) எனும் அரபு அறிஞர், கல்தூன் எழுதிய 'முகத்திமா' ஒரு சமூகவியல் படைப்பாகும் என குறிப்பிடுகின்றார் (Minoo, 1984). கல்தூனின் முகத்திமா ஆறு (நூல்) பகுதிகளில் சமூகவியலுக்கு ஆற்றிய பங்கு, பணிகள் பற்றி சாதி அல்-ஹுஸ்ரி குறிப்பிடுகின்றார். 'முகத்திமா'வின் நூல் I: பொதுச் சமூகவியல் (general sociology), நூல் II மற்றும் III: அரசியல் சார் சமூகவியல் (sociology of politics), நூல் IV: நகர வாழ்வு பற்றிய சமூகவியல் (sociology of urban life), நூல் V: பொருளியல் சார் சமூகவியல் (sociology of ecnomics) மற்றும் நூல் VI: அறிவுசார் சமூகவியல் (sociology of knowledge). கல்தூனின் இத்தகைய சமூகவியல் பணி, வரலாற்றாய்விலும் பொருளியலிலும் அரசியல் மற்றும் கல்வித் துறையிலும் பாரிய அவதானத்தை ஏற்படுத்தியது (Encyclopaedia Britannica; May 23, 2020).

இப்னு கல்தூனின் பிரதான ஆய்வுகளுள் ஒன்றான **'அஸாபியாஹ்' (*Asabiyah*)**, இதனை சமூக ஒற்றுமை, சமூக ஒருங்கிணைவு, சமூக நல்லிணக்கம் என மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த அஸாபியாஹ் (சமூக ஒருங்கிணைவு) பழங்குடியினர் மற்றும் பிற உறவுமுறைக் குழுக்களுக்கிடையிலான உறவையும் அதன் விளைவுகளையும் விபரிப்பதற்காக கல்தூன் பயன்படுத்திய கோட்பாடாகும். இப்னு கல்தூனின் பகுப்பாய்வுகள், சமூக ஒருங்கிணைவு எவ்வாறு இந்த சுய குழுக்களை அதிகாரத்துக்கு கொண்டு செல்கின்றது என விளக்குகின்றன. எனினும், அக்குழுக்களின் வீழ்ச்சியில் சமய சித்தாந்தங்களை விட பிற காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதாகவும் கல்தூன் சுட்டிக்காட்டுகின்றார். குறிப்பாக சமூக ஒற்றுமை, முரண்பாடு, அதிகாரம் போன்றவற்றின் மீது உளவியல், சமூகவியல், பொருளாதார, அரசியல் விதைகள் தூவப்படுவதாக கல்தூன் குறிப்பிடுகின்றார். இதனால், இந்நிலை மாற்றப்படுவதற்கு ஒரு புதிய சிந்தனை மிக்க குழு உருவாக்கப்பட வேண்டும் என்றார். எனினும், இப்னு கல்தூனின் இத்தகைய கருத்துக்கள் உப-சஹாரா ஆபிரிக்காவின் சான்ஜ் (Zanj) மக்களைப் பற்றியதாகவே அமைந்திருந்தது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (Minoo, 1984).

புதிய விஞ்ஞானம்: கல்தூனின் ‘புதிய விஞ்ஞானம்’ (New Science) என்பது, மனித சமூக ஒழுங்கமைப்புக்களின் விஞ்ஞானம் என அழைக்கப்படுகின்றது, அதாவது ‘சமூகவியல்’ (*Sociology*) என்றே விளக்கப்படுகின்றது. கல்தூனின் கருத்துப்படி, ‘விஞ்ஞானம் என்பது அதற்கென்று தனித்துவமான இலக்குகளைக் கொண்டுள்ளது. அது மனித நாகரீகம், சமூக ஒழுங்கமைவு போன்ற பல விடயங்களை குறிப்பிட்டு ஆராய்வதாகும், அத்தோடு அவ்விஞ்ஞானம் நாகரீகமயமாதலால் (civilization) ஏற்படக்கூடிய பிரச்சினைகளையும் அதன் தனித்துவமான பின்னணியில் நின்று ஆராயவல்லது’ (Muqaddimah, 1958:77; cited in. Soyer & Gilbert, 2012:15). நாகரீகம் என்பது மனித இடைவினையின் (உற்பத்தி) விளைவாகும் (civilization is a product of human interaction) எனக் குறிப்பிடும் கல்தூன், உண்மையில் கலாச்சாரம் என்பது ஒரு நாகரீகத்தின் அடிப்படை விடயமே அல்ல, அது மக்களின் இடைவினையால் தூண்டப்படுவதாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். மக்கள் பொதுவாக ஏனையவர்களுடன் இணைவதற்கும் தொடர்புகொள்வதற்கும் தேவையான இயலுமையை, திறன்களைக் கொண்டுள்ளனர். எனவே, இடைவினை புரிதலின் விளைவாக தோன்றுவதே நாகரீகம் என்பது கல்தூனின் வாதமாகும் (Mohammed, 1998). புதிய விஞ்ஞானத்தின் அடிப்படை எண்ணக்கருக்களாக: மனித நாகரீகம் (human civilization), பாரம்பரிய சமூகம் (primitive society), அரசு (the state), நகரங்கள் (the cities), தொழில் (the occupation) மற்றும் விஞ்ஞானம் (the science) போன்றவற்றை கல்தூன் விபரித்துள்ளார்.

இத்தகைய எண்ணக்கருக்களுள் முக்கியமாக சமூக செயலாக்கம் இடம்பெறும் இரு கட்டமைப்புக்களான கிராமிய மற்றும் நகர சமூகக் கூறுகள் பற்றிய வாதத்தினை அதிகமான இடங்களில் கல்தூன் அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளார். மேலைத்தேய சமூகவியல் ஆராய்வதைப் போலவே கல்தூனும் கிராமிய (பாலைவன சூழலில் வாழ்ந்த) மக்களையும் நகர்ப்புறங்களில் வாழ்க்கை அமைத்துக் கொண்ட மக்களையும் ஆராய்ந்தார். நகரத்தை விட வித்தியாசமான வாழ்க்கை முறைமையைக் கொண்ட கிராமத்தையும் கிராமத்தை விட வித்தியாசமான வர்த்தகம், உற்பத்தி, நெரிசல் நிறைந்த வாழ்க்கைச் சூழலைக் கொண்ட நகரவாழ் சமூகத்தையும் கல்தூன் ஒப்பிட்டு விளக்கினார். இவ்விரு சூழ்நிலைகளுக்குள் ஏற்படக்கூடிய வேறுபட்ட சமூகப் பிரச்சினைகளையும் இவ்விரு சமூகக் கட்டமைப்பில் தாக்கம் செலுத்தக்கூடிய நாகரீகமயமாதல் பற்றியும் விரிவாக கல்தூன் தனது ‘முகத்திமா’ வில் வாதிட்டுள்ளார் (Soyer & Gilbert, 2012). எனவே, கிராமிய பாலைவன குடியிருப்பாளர்கள் என்று ஒரு தரப்பினரையும் நகரக் குடியிருப்பாளர்கள் என மற்றைய தரப்பினரையும் விபரித்து நோக்கும் கல்தூன், இரண்டு சமூக அலகுகளான கிராமிய சமூகம் (*Badawa* [rural society]), நகர சமூகம் (*Hadara* [urban society]) எனும் இரட்டை வகையீட்டு (dualist typology) தத்துவத்தை சமூகவியலுக்குத் தந்தார் (Muqaddimah, 1958:250; cited in. Soyer & Gilbert, 2012:15) என்பதும் இங்கு அவரின் அறிவியல் பங்களிப்பை தெளிவாகக் காட்டுகின்றது.

முரண்பாட்டுக் கோட்பாடு: ஒரு சமூகத்தின் வளர்ச்சி, வீழ்ச்சி மற்றும் நாகரீகம் என்பவற்றின் மீது சமூக ஒருங்கிணைவு ‘அஸாபியாஹ்’ (*Asabiyah* [social solidarity]) மிக முக்கிய பாத்திரத்தை வகிப்பதாக கல்தூன் விளக்குகின்றார். எனவே, சமூகத்தின் ஆக்கமும் அழிவும் ஒருங்கிணைவை வைத்தே தீர்மானிக்கப்படுகின்றது என்பது இவரின் வாதமாகும். இதனால்தான் முரண்பாடு பற்றி கல்தூன் முன்வைத்த கருத்துக்கள் சமூக ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டிருந்தன. அதாவது சமூக ஒற்றுமை, ஒருபுறம் சமூகத்தில் குழு ரீதியான பிணைப்புக்களை உருவாக்கினாலும் மறுபுறம், சமூகக் குழுக்களை இல்லாமல் செய்கின்ற எதிர்மறைப் பண்பினையும் கொண்டுள்ளதாக கல்தூன் கருதுகின்றார். இந்த ஒற்றுமை (அஸாபியாஹ்) கல்தூனின் சமூக மாற்றத்தின் சுழற்சிமுறைக் கோட்பாட்டில் (cyclical theory of social change) முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஏனெனில் இந்த அஸாபியாஹ் என்பது மனித ஒழுங்கமைப்பினை மதிப்பீடு செய்கின்ற பூகோள கோட்பாட்டு மாதிரியாக (universal theoretical framework) காணப்பட்டதாக கல்தூன் குறிப்பிடுகின்றார் (Soyer & Gilbert, 2012:15-16).

மேலும், ‘அஸாபியாஹ்’வின் முக்கியத்துவம் பற்றி விளக்கும்போது, அதற்கு மக்கள் மத்தியில் ஒன்றிணைவதற்கான உணர்வுகள் (associative sentiment), குறிக்கோள் மிகுந்த ஐக்கியம் (unity of purpose), சமூக பொருளாதார விருப்புள்ள சமுதாயம் (community of social and economic interest), எல்லோரும் ஒன்று எனும் உணர்வு (oneness of feeling) போன்ற பண்புகள் அடிப்படையான அம்சங்களாக இருக்க வேண்டும் என்ற கருத்தை கல்தூன் முன்வைத்துள்ளார். இத்தகைய பண்புகள்தான் சமூகத்தில் மாற்றத்தைத் துரிதப்படுத்துகின்ற கருவிகளாக தொழிற்படுவதாக கல்தூன் நம்பினார். ஒவ்வொரு சமூகமும் பாரம்பரிய நிலையிலிருந்து நாகரீகத்தின் உயர் நிலைக்கு மாற்றமடைந்து செல்கின்றது, அது கிராமத்திலிருந்து நகரத்துக்கு மாற்றமுறுகின்றது. இங்குதான் சமூக ஒற்றுமை (அஸாபியாஹ்) என்பது பாரிய வகிபாகத்தைச் செலுத்துவதன் ஊடாக மனித நாகரீகம் எழுச்சியடைகின்ற, வீழ்ச்சியடைகின்ற இரு நிலைகளைக் கடக்கின்றது, இது சமூகத்தினது உயிர்ப்பு, வளர்ச்சி, முதிர்ச்சி, வீழ்ச்சி என பல படிநிலைகளில் செல்வாக்குச் செலுத்துவதாக கல்தூன் சுட்டிக்காட்டினார் (Ali, 1977). அதாவது, சமூகத்தில் ஏற்படும் மாற்றம், நாகரீகமாதல் என்பன மக்களின் ஒற்றுமையின் விளைவு என குறிப்பிடும் கல்தூன் மக்கள் மத்தியில் குறைந்த தரத்தில் ஒருமைப்பாடு இருக்கும்போது அது அச்சமூகத்தினை பின்நோக்கி அல்லது வீழ்ச்சியை நோக்கி நகர்த்தும் எனும் கருத்தை வலியுறுத்தினார்.

இது தவிர, கல்தூனின் பொருளாதாரக் கோட்பாடுகள் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் அடிப்படையிலும் சமூக ஒழுக்கம், விழுமியம் சார்ந்த அடிப்படையிலும் அமைந்திருந்தமையை அவதானிக்க முடிகின்றது. ஜோர்ஜ்டவ்ன் பல்கலைக்கழகத்தை (Georgetown University) சேர்ந்த பொருளாதார வல்லுனரும் வரலாற்றாசிரியருமான பேராசிரியர் இப்றாஹிம் ஒவெய்ஸ் (Professor Ibrahim Oweiss), இப்னு கல்தூனின் தொழிலாளர் கோட்பாடு குறித்து சுட்டிக்காட்டினார். இப்னு கல்தூன், தொழில் பிரிப்பு (division of labor), வரி (tax), பற்றாக்குறை மற்றும்

பொருளாதார வளர்ச்சி (scarcity and economic growth) பற்றிய கோட்பாடுகளை தெளிவாக முன்வைத்திருந்தார் (Irwin, 2014). அதேபோன்று வறுமையின் தோற்றம், வறுமைக்கான காரணிகள் பற்றி முதன் முதலில் ஆய்வு செய்தவர்களில் கல்தூனும் ஒருவராவார். கல்தூனின் கருத்துப்படி 'ஒழுக்கம் மற்றும் மனித விழுமியங்கள் அழிந்துபோனதன் விளைவாக வறுமை ஏற்பட்டது' என்றார் (Akhmad & Astuti, 2014). மேலும் நுகர்வு, அரச முதலீடு போன்றவற்றில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை என்பதை கல்தூன் நோக்கினார். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) ஒரு சூத்திரமாகவும் அவதானிக்கப்பட்டது. வறுமை என்பது நிதி தொடர்பாக எடுக்கப்பட்ட தவறுதலான தீர்மானங்களால் ஏற்படுவதல்ல, அது ஏனைய புறக்காரணிகளின் விளைவாக ஏற்படுவதாகும். எனவே, வறுமையை ஒழிப்பதில் அரசாங்கம் கட்டாயம் ஈடுபடல் வேண்டும் என கல்தூன் வாதிட்டார் (Akhmad & Astuti, 2014). மேற்கத்தேய சிந்தனையாளர்கள், குறிப்பிட்ட அடிப்படையில் கல்தூனின் பணிகள் அவரது பங்களிப்புக்களை ஒப்புக்கொள்கின்றார்கள். எனினும், கல்தூனின் பொருளாதார கருத்துக்கள் பற்றி பண்டைய பொருளியலாளர்கள் எவ்வளவு தூரம் அறிவார்கள் என்பது தெளிவின்றி காணப்படுகின்றது.

எனவே, வட-ஆபிரிக்காவின் அராபிய முரண்பாட்டுச் சூழலிலிருந்து 14ஆம் நூற்றாண்டு இத்தகைய கருத்துக்களை, கோட்பாடுகளை முன்மொழிவது பாரிய பணியாக இருந்தாலும் இப்னு கல்தூனுக்கு அது சாத்தியமாக இருந்திருக்கின்றது. ஐரோப்பிய-மையப் போக்குகள் ஆபிரிக்க சமூகத்தின் கருத்துக்களுக்கு உருவம் கொடுக்க 14 தொடக்கம் 17ஆம் நூற்றாண்டுகளில் சற்று தாமதித்திருந்தாலும் பிற்பட்ட 19ஆம் மற்றும் 20, 21ஆம் நூற்றாண்டுகளின் வரலாற்றில், சமூகவியலில், பொருளியலில் கல்தூன் முன்வைத்த கருத்துக்கள் பலராலும் எடுத்தாராயப்பட்டுள்ளதனை அவதானிக்க முடிகின்றது.

### நோக்கம் 02: கல்தூனிய சிந்தனை மரபு மற்றும் அவரின் கருத்துக்கள் மீதெழுந்த விமர்சனங்களை ஆராய்தல்

#### இப்னு கல்தூனின் கோட்பாட்டு மரபும் விமர்சனங்களும்

இப்னு கல்தூனின் வரலாற்று முறையியலை அவரின் காலத்தில் மிகக் குறைவானவர்களே பின்பற்றினர். இப்னு கல்தூன் சமய விஞ்ஞான பரப்பில் பிக்ஹ் (Jurisprudence) துறையில் சிறந்த விரிவுரையாளராக இருந்தபோது குறிப்பிட்ட சில மாணவர்களே அவரின் 'முகத்திமா' பற்றி அறிந்திருந்ததுடன், அதன் செல்வாக்குக்கும் உட்பட்டிருந்தனர். அத்தகைய மாணவர்களுள் அல்-மக்ரிசி (Al-Maqrisi) கல்தூனின் முகத்திமா பற்றி பாராட்டியிருந்தார். எனினும், அத்தகைய பாராட்டுக்களை பல புலமையாளர்கள் அறிந்திருந்தும் கூட கல்தூனின் முறையியலைப் பற்றிய குறைவான புரிதலே அவர்களிடம் காணப்பட்டது (Simon, 2002).

எனினும், இப்னு கல்தூன் அவரது சமகாலத்தவர்களின் விமர்சனங்களுக்கும் உட்பட்டிருந்தார். குறிப்பாக, இப்னு ஹஜர் அல்-அஸ்கலானி (Ibn Hajar Al-Asqalani) குறிப்பிடுகையில் 'இப்னு கல்தூன் எகிப்தில் மதிக்கப்பட்ட மரபுகளையும் அங்கிருந்த பாரம்பரிய சட்டங்கள், ஆடை அமைப்புக்கள் போன்றவற்றையும் எதிர்த்திருந்தார். எனவே, மக்கள் பெரும் விருப்பத்துடன் ஏற்றுக்கொண்ட மரபுகளை எதிர்ப்பது அல்லது விமர்சிப்பது பாரிய கவனயீர்ப்பை ஏற்படுத்தும். இத்தகைய எதிர்ப்புவாதம்தான் கல்தூனின் பணிகள் பேசப்பட்டதற்கும் வரவேற்பைப் பெற்றதற்கும் காரணமாக இருந்திருக்கும்' என விமர்சித்தார். அதேபோன்று, அரபு இலக்கிய எழுத்தாளர் அல்-ஜஹிஸ் (Al-Jahiz), 'வரலாறு தொடர்பில் குறைந்தளவான அறிவு, பொருத்தமற்ற தலைப்பு, சிறந்த ஒழுங்கமைப்பின்மை போன்றன கல்தூனின் பணிகளில் காணப்பட்டது' என விமர்சனம் செய்துள்ளார்.

17ஆம் நூற்றாண்டில் உதுமானிய பேரரசில் இருந்த புலமையாளர்கள் இப்னு கல்தூனின் பணிகள் சிலவற்றை அங்கீகரித்தனர். குறிப்பாக, துருக்கிய உதுமானிய பேரரசின் வரலாற்றாசிரியர் முஸ்தபா நய்மா (Mustafa Naima) உதுமானிய பேரரசை விபரிப்பதற்கு இப்னு கல்தூன் முன்வைத்த 'பேரரசுகளின் எழுச்சி, வீழ்ச்சி பற்றிய சுழற்சிமுறைக் கோட்பாட்டை (Khaldun's '*cyclical theory of the rise and fall of empires*') பயன்படுத்த முயற்சித்தார் (Simon, 2002).

ஐரோப்பாவில் இப்னு கல்தூனின் சுயசரிதை 1697ல் வெளியான போது மேற்குலக கவனயீர்ப்பு கல்தூன் மீது ஏற்பட்டது (Alatas, 2013). அதனைத் தொடர்ந்து 1806ல் முகத்திமாவின் ஒரு மொழிபெயர்ப்புப் பகுதியுடன் இணைந்ததாக இப்னு கல்தூனின் சுயசரிதையை சில்வெஸ்ட்ரே டி சஸி (Silvestre De Sacy) பிரசுரித்தபோது இப்னு கல்தூனின் மீதான பார்வை மேற்கு நாடுகளில் அதிகம் எழுந்தது (Enan, 2007). பின்னர், 1816ல் மீண்டும் சில்வெஸ்ட்ரே டி சஸி, முகத்திமா பற்றிய மேலதிகமான விளக்கத்துடன் கல்தூனின் சுயசரிதையை பிரசுரித்தார். முகத்திமாவின் ஒவ்வொரு அத்தியாயத்தின் மொழிபெயர்ப்பும் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டபோது இப்னு கல்தூனின் பணியினை விசேடட கவனத்துடன் பரந்தளவில் மேற்குலகில் ஆராயத் தொடங்கினர் (Enan, 2007).

ஆரம்ப காலத்தில் இப்னு கல்தூன் பற்றிய ஐரோப்பியர்களின் கருத்துக்கள் மற்றும் கற்கைகள் மீது காலணித்துவத்தின் தாக்கம் இருந்தது. இதனால் ஐரோப்பிய ஆய்வாளர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டனர். அத்தோடு 19ஆம் நூற்றாண்டில் வட-ஆபிரிக்காவின் அறிவியல் அம்சங்களை படிப்பது பெறுமதி அற்றது என அதிகமான சமூகவியலாளர்கள் கருதினர். மேலும், பெரும்பாலான சமூகவியலாளர்களின் பார்வையில் இப்னு கல்தூன் வட-ஆபிரிக்காவின் சமூகவியலாளர் (Sociologist of North Africa) எனக் கருதுவதே பொருத்தமானது என்ற கருத்தையும் வலுவாக முன்வைத்தனர் (Simon, 2002).

றினோல்ட் ஏ. நிக்கல்சன் (Reynold A. Nicholson) என்பவர், 'இப்னு கல்தூன் ஒரு தனித்துவமான, திறமை மிக்க முஸ்லிம் சமூகவியலாளர்' என குறிப்பிட்டு அங்கீகரித்தார். எனினும், கல்தூனின் பணிகள் குறிப்பிட்டுக் கூறும் அளவுக்கு கவனத்தில் எடுக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டினார் (Alatas, 2013).

ஸ்பானிய (Spania) தத்துவவியலாளர் ஜோஸ் ஓர்டேகே கெஸ்ஸட் (Jose Ortegay Gasset) குறிப்பிடுகையில், ஆபிரிக்க சிந்தனைகள் குறைவாக எழுந்தமைக்கு வட-ஆபிரிக்காவில் இடம்பெற்ற அரசியல் முரண்பாடு காரணமாக இருந்தது. எனினும், இப்னு கல்தூன் அத்தகைய சூழ்நிலையிலும் நாடோடி வாழ்க்கைக்கும் இயல்பு வாழ்க்கைக்கும் இடையிலான தொடர்பினை முரண்பாட்டுக் கோட்பாட்டின் மூலம் இலகுவாக விளக்கியுள்ளார் எனவும் பாராட்டப்படுகின்றார் (Alatas, 2007 & 2013).

நவீன வரலாற்று ஆசிரியர்களின் கருத்துப்படி, குறிப்பாக பிரித்தானிய வரலாற்றியலாளர் ஆர்னோல்ட் ஜோசப் தொயின்பீ (Arnold Joseph Toynbee) குறிப்பிடுகையில், கல்தூனின் முகத்திமா ஒரு சிறந்த அறிவியல் பணியாகும் (Encyclopedia Britannica; 15th eds: 9:14). மேலும், பிரித்தானிய தத்துவவியலாளர் றெரபர்ட் பிலின்ட் (Robert Flint), இப்னு கல்தூனை ஒரு வரலாற்று ஆசிரியராக, சமூகவியலாளராக அங்கீகரிக்கின்றார். இத்தகைய அங்கீகாரங்களுடன் சில விமர்சனங்களும் ஒரு புலமையாளர் என்ற ரீதியில் கல்தூனின் மீதும் அவரின் கருத்துக்கள் மீதும் முன்வைக்கப்பட்டன. எனினும், அராபிய முஸ்லிம் அறிவியல் பாரம்பரியத்தில் பெறுமதிமிக்க பல பங்களிப்பினைச் செய்ததன் மூலம் இப்னு கல்தூன் 14ஆம் நூற்றாண்டில் மட்டுமன்றி தற்காலத்திலும் ஒரு வரலாற்றியலாளராக, சமூகவியலாளராக, அரசியல்-பொருளியல் புலமையாளராக கருதப்பட்டுவருகின்றார்.

சுழற்சிமுறைக் கோட்பாடு (cyclical theory) என்பது புதிய விடயம் அல்ல. அது கிரேக்க காலத்திலும் பேசப்பட்டுவந்த ஒரு விடயமாகும். சுழற்சிமுறை வரலாறு அல்லது சுழற்சிமுறை கோட்பாடு அரிஸ்டோட்டில் போன்றோராலும் பிரபல்யமாக பேசப்பட்டுள்ளது. அதுபோன்று பிளேட்டோ, ஸ்டேட்ஸ்மென், திமாயுஸ் மற்றும் கிரிடியாஸ் (Plato, Statesman, Timaeus and Critias) போன்றோரால் பல்வேறு கலந்துரையாடலுக்கு உட்பட்டுள்ளதனை அவதானிக்கலாம். எனவே சுழற்சிமுறைக் கோட்பாட்டை முன்வைத்த பல்வேறு தத்துவவியலாளர்களுள் இப்னு கல்தூனும் பிரபலமான ஒருவர், குறிப்பாக 14ஆம் நூற்றாண்டின் இஸ்லாமிய கல்வியியலாளர், வரலாற்றியலாளர் என்பதுடன் அவர் சமூகம், அரசியல் பற்றிய பங்களிப்புக்களை அதிகம் செய்தவர் என குறிப்பிடலாம் (Onder & Ulasan, 2018).

இப்னு கல்தூனின் கோட்பாடுகள் மதச்சார்பின்மையை அடிப்படையாகக் கொண்டதா அல்லது சரியான மத வழிமுறை சார்ந்ததா, உண்மையில் அவர் ஒரு சமூகவியலாளர்தானா, மத்தியகால சமூகத்தில் இவர் சமூகவியலாளராக பணியாற்றியவரா, நவீன சமூகவியல் ஆய்வாளர் எனக் கொள்ளலாமா, நவீன சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பில் இவர் கருத்துக்களை முன்வைத்துள்ளாரா என பல கேள்விகள் தொடுக்கப்படுகின்றன. என்றாலும் வரலாற்றை விவரிப்பதற்கு அவர் சமூகவியல் விபரங்களை முன்வைத்தார். அத்துடன், வரலாற்றை விளக்கும் சமூகவியலுக்கான புதிய மொழியை, வடிவத்தை விருத்தி செய்தார். எனினும், அத்தகைய கருத்துக்களை முன்மொழியும் போதும் சமூக மாற்றத்தின் ஊடாக வரலாற்றை விவரிக்கும் போதும் மதம் சார்ந்த கருத்துக்களையும், மதம் சாரா கருத்துகளையும் கொண்டு விளக்கினார் (Shahidipak, 2020). இந்த முறையியல் சமூகவியல் சிந்தனையாளர்கள் பலரால் கேள்விக்கு உட்படுத்தப்பட்டும் விமர்சிக்கப்பட்டும் வந்தது. எனவே இப்னு கல்தூனை சமூகவியலாளராக ஏற்றுக்கொள்ளும் சிந்தனையாளர்கள் மத்தியிலும் அவரின் கருத்துக்கள் தொடர்பாக விமர்சனங்கள் உள்ளன.

இப்னு கல்தூனை மேற்குலகு சமூகவியலின் தந்தை என அங்கீகரித்த போதிலும் அவரின் பணிகள் தற்கால நவீன சமூகவியல் பரப்பில் பெரும்பாலும் அங்கீகரிக்கப்படவில்லை. கல்தூனின் பணிகள் வரலாறு, மெய்யியல், சமூகவியல், அரசியல் விஞ்ஞானம் மற்றும் கல்வி போன்ற துறைகளில் பாரிய செல்வாக்குச் செலுத்துகின்றன. இவரது பெரும்பாலான நூல்கள் கிழக்கிலும் மேற்கிலும் அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இதனால்தான் பேராசிரியர் கம் புளோஸ் (Gum Ploughs) மற்றும் கொலோசியோ (Kolosio) குறிப்பிடுகையில், கல்தூனின் முகத்திமா, ஒரு நூற்றாண்டின் பின்னர் மக்கியவல்லியினால் எழுதப்பட்ட "The Prince" (இளவரசன்) எனும் நூலிலும் பார்க்க முதன்மையானதாக கருதப்படுகின்றது என குறிப்பிடுகின்றனர் (Shahidipak, 2020). இப்னு கல்தூனின் சமூகவியல் புலமை பற்றி சாஹிடிபக் (2020) தனது ஆய்வுக் கட்டுரையில் பின்வருமாறு விபரிக்கின்றார்.

1. இப்னு கல்தூன் தனது முகத்திமாவில் மனித சமூகம் பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் 7 தொடக்கம் 15ம் நூற்றாண்டு வரை இஸ்லாமிய நாகரீகத்தின் மனித வரலாற்றுக் காரணிகளை விபரிக்கின்றார்.

2. மனித சமூக வரலாறு குறித்த இப்னு கல்தூனின் கருத்துக்கள் புதிய சிந்தனைகளாக ஏற்கப்பட்டன. அத்துடன் அவர், முன் நவீன காலத்து நாகரீகம் குறித்த முதலாவது சிறந்த பகுப்பாய்வாளராக கொள்ளப்படுகிறார்.

3. சமூகவியல் அடிப்படைக் கருத்துக்களை இப்னு கல்தூன் பயன்படுத்தினார். குறிப்பாக சமூக கட்டமைப்பு (social structure). இது 14ஆம் நூற்றாண்டில் கூட சமூகவியலின் மையப் பொருளாக விளங்கியது. இதே விடயத்தை 400 ஆண்டுகள் கழித்து ஸ்பென்சர் (Spencer) 1858ல் பயன்படுத்தினார். சமூக கட்டமைப்பு பற்றி விபரிக்க உரிய எண்ணக்கருக்களை முகத்திமா எனும் நூலில் இருந்து 20ஆம் 21ஆம் நூற்றாண்டைய புலமையாளர்கள் பயன்படுத்தி உள்ளனர் (Shahidipak, 2020).

இத்தகைய அடிப்படையில் இப்னு கல்தூனின் பணிகள் சமூகவியல் சார்ந்த பல்வேறு விவரங்களை வரலாற்றில் கொண்டிருந்தாலும் அவை மேற்குலக ஆதிக்கப் போக்கினால் பெரிதும் பலவீனப்படுத்தப்பட்டுள்ளன என்றே கருதவேண்டியுள்ளது.

**பிரதான பெறுகைகள்**

ஆய்வின் இரண்டு நோக்கங்களும் அடையப்பெறும் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு, கலந்துரையாடல்கள் மூலம்

நோக்கும்போது பின்வரும் முக்கிய விடயங்கள் இக்கட்டுரையின் பிரதான பெறுபேறுகளாக கண்டறியப்பட்டுள்ளன.

1. 'முகத்திமா' (*Muqaddimah*): அரபுலக வரலாற்றில் (வட-ஆபிரிக்க இஸ்லாமிய மரபில்) மிகக் குறுகிய ஆறு மாதங்களுக்குள் எழுதப்பட்ட நூல். இது வரலாற்றுச் சமூகவியலில் பெரும் பேசுபொருளாக அமைந்துள்ளது. இது கல்தூனிய அடிப்படைச் சூத்திரமாக அமைந்துள்ளது. அத்துடன் முகத்திமாவில்தான் சமூகவியல், அரசியல், வரலாற்றியல் தொடர்பான பல்வேறு கருத்துக்களை கல்தூன் விபரித்துள்ளமை இக்கட்டுரையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

2. 'அஸாபியாஹ்' *(Asabiyah):* சமூக ஒருங்கிணைவு (சமூக நல்லிணக்கம், சமூக ஒற்றுமை) மூலம் உறவுமுறைக் குழுக்கள், பழங்குடியினர் மத்தியில் காணப்பட்ட இடைவினை மற்றும் அதிகாரத்தை கைப்பற்றும் குழுக்கள் பற்றிய கல்தூனின் கருத்துக்கள் ஆராயப்பட்டுள்ளன.

3. சமூக மாற்றம்: இரு பெரும் சமூகக் கூறுகளாக விளங்கும் கிராமிய சமூகம் *(Badawa),* நகர சமூகம் *(Hadara)* போன்றவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் மற்றும் அவற்றுக்கிடையில் ஏற்படும் மாற்றங்கள் குறித்த வாதம் கல்தூனிய சிந்தனை அடிப்படையில் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் சமூகவியல் கண்ணோட்டத்தில் நோக்கும்போது கல்தூன், இடம்பெயர்ந்த (நாடோடி) வாழ்க்கைக்கும் இயல்பான வாழ்க்கைக்கும் இடையிலான வேறுபாட்டை ஆராய்ந்துள்ளமையும் இங்கு கண்டறியப்பட்டுள்ளது.

4. அரசியல் ஒழுங்கமைப்புக்கள் (political organization), அரசாங்கம் (government), மற்றும் போராட்ட வீரர்கள் ஒரு நகரத்தைக் கைப்பற்றும்போது ஏற்படும் தவிர்க்கமுடியாத அதிகார இழப்பு (Loss of power) பற்றியும் கல்தூன் விவாதித்துள்ளார்.

5. அரசாட்சிகள், அதிகாரங்கள் போன்றவற்றில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து விளக்கும் கல்தூனின், 'சாம்ராச்சியங்களின் எழுச்சி, வீழ்ச்சி குறித்த சுழற்சி முறைக் கோட்பாடு' (cyclical theory of the rise and fall of empires) முக்கிய அறிவியல் பணியாகவுள்ளமை இக்கட்டுரையில் நோக்கப்பட்டுள்ளது.

6. பூகோள வரலாறு, மனிதப் பண்புகள், சமூகம், சமூகக் கட்டமைப்பு, உறவுமுறைகள், சமூகக் குழுக்கள் போன்ற பல்வேறு கருத்துக்கள் மூலம் கல்தூன் சமூகவியல் அறிவை அரபுலகுக்கு 14ஆம் நூற்றாண்டு தந்துள்ளார் என்பதும் இதில் தெளிவாக ஆராயப்பட்டுள்ளது.

7. பொருளாதாரக் கொள்கைகள் குறித்தும் தொழிற் பிரிப்பு, வரி, பொருளாதார விருத்தி, வறுமை, வறுமைக்கான காரணம், வறுமையை குறைப்பதில் அரசாங்கம் கொண்டிருக்க வேண்டிய பங்களிப்புக்கள், மனித விழுமியத்துக்கும் வறுமைக்குமுள்ள தொடர்பு போன்ற பல்வேறு அரசியல், பொருளாதார, சமூகவியல் கருத்துக்கள் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

8. கல்தூனின் கோட்பாட்டு மரபில் அவரின் கருத்துக்கள், பணிகள் என்பன பல விமர்சனங்களுக்கு உட்பட்டமை இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது. அத்துடன் கல்தூனின் கோட்பாட்டு மரபுக்கு கிடைக்கப்பெற்ற ஆதரவு, அங்கீகாரம் என்பனவும் இக்கட்டுரையில் நோக்கப்பட்டுள்ளன.

எனவே, இக்கட்டுரை கல்தூனின் பணிகள் எனும் அடிப்படையில் பிரதானமாக அவரின் சமூகவியல் பங்களிப்புக்களையும் ஏனைய அறிவியல் கருத்துக்களையும் ஆராய்ந்து விபரித்துள்ளது.

**முடிவுரை**

இக்கட்டுரையில் 14ஆம் நூற்றாண்டின் புலமையாளர் இப்னு கல்தூனின் அறிவியல் பணிகள் எடுத்தாராயப்பட்டுள்ளன. அடிப்படையில் இக்கட்டுரை சமூகவியல் பின்புலத்தில் நின்று கல்தூனின் முக்கிய பங்களிப்புக்கள் குறித்து ஆராய்ந்து பெறுபேறுகளை, கலந்துரையாடல்களை முன்வைத்துள்ளது. கட்டுரையின் பிரதான நோக்கம் எனும் அடிப்படையில் இப்னு கல்தூனின் வரலாற்று படைப்புக்கள் கொண்டிருந்த சமூகவியல் பங்களிப்புக்கள் ஆராயப்பட்டுள்ளன. குறிப்பாக, முகத்திமா (*Muqaddimah*) எனும் வரலாற்று நூல் மற்றும் அதன் மூலம் முன்வைத்த அறிவியல் வாதங்கள், அஸாபியாஹ் *(asabiyah)* எனும் சமூக ஒருங்கிணைவுக் கோட்பாடு, சமூக மாற்றத்தின் சுழற்சிமுறை *(cyclical pattern of social change)* முரண்பாட்டுக் கோட்பாடு *(conflict theory),* நவீன விஞ்ஞானம் *(modern science)* போன்றவற்றை இக்கட்டுரை ஆராய்ந்துள்ளது. மேலும், கல்தூனின் கருத்துக்கள் மீது பல விமர்சனங்கள் எழுந்திருப்பினும் அவரின் கோட்பாடுகள் அனைத்தும் நூற்றாண்டுகளைக் கடந்து பேசப்பட்டும், ஆராயப்பட்டும், விவாதிக்கப்பட்டும் வருகின்றமை அவரின் அறிவியல் பணி காலங்கள் கடந்து நிலைத்து நிற்கின்றமையைக் காட்டுகின்றது. பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களில் இருந்து நோக்கும் போது இப்னு கல்தூன் சமூகவியலுக்கு 14ஆம் நூற்றாண்டில் பல்வேறு பங்களிப்புக்களை செலுத்தியுள்ளமை மனம்கொள்ளத்தக்கதாகும். எனினும், கைத்தொழில் புரட்சிக்கு பிந்திய ஐரோப்பிய-மையவாதம் அரபுலக இஸ்லாமிய (வட-ஆபிரிக்க) தத்துவவியலாளரின் கருத்துகளை சமூகவியலுக்குள் கொண்டுவர முடியாமல் போயுள்ளது. அதற்கு காலணித்துவ சூழல், ஆபிரிக்காவில் ஏற்பட்ட முரண்பாடு, சாம்ராஜ்ஜிய அரசியல் சிதைவுகள் உட்பட வேறு காரணங்களும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. எவ்வாறெனினும், முன்-நவீனத்துவ காலத்தில் (pre-modern period) வாழ்ந்த முன்னோடியான முஸ்லிம் புலமையாளர் என இப்னு கல்தூன் ஏற்றுக்கொள்ளப்படுகின்றார் (Rameez, 2018:45). எனவே, கல்தூனின் பணிகள் வரலாற்றை எழுதுவதற்கும் சமூக நிகழ்வுகளை புரிந்துகொள்வதற்கும் தேவையான புதிய முறையியலை (new methodology) சமூகத்துக்கு தந்திருந்தது. ஆகவே, சாம்ராஜ்ஜிய அரசாங்கங்களுக்கு அரசியல் கருத்துக்களை

முன்வைத்தமை, பொருளாதார மறுசீரமைப்புக்குரிய கோட்பாடுகளை முன்மொழிந்தமை, பூகோள மனித வரலாறு குறித்து சமூகவியல் பார்வையில் கருத்துக்களை, கோட்பாடுகளை அறிமுகம் செய்தமை போன்ற பல்வேறு பாரிய பங்களிப்புக்கள் மூலம் ஒரு சிறந்த வரலாற்றாசிரியராக, தத்துவவியலாளராக, சமூகவியல் புலமையாளராக மட்டுமன்றி ஒரு சிறந்த மறுமலர்ச்சியாளராகவும் இப்னு கல்தூன் வரலாற்றில் தடம்பதித்துள்ளார் என்பதை இக்கட்டுரை முடிவாக உரைக்கின்றது.

## உசாத்துணைகள்


Akhmad, A and Astuti D.P. (2014). *Dynamic Model of Ibn Khaldun Theory on Poverty*. Humanomics: The International Journal of Systems and Ethics. 30(2): 2014. 136-161. Emerald Publishing. URL: https://ideas.repec.org/a/eme/humpps/v30y2014i2p136-161.html

Alatas, S.F. (2007). *The Historical Sociology of Muslim Societies*. International Sociology. 22(3): 267-288. DOI: https://doi.org/10.1177/0268580907076570.

Alatas, S.F. (2013). *Makers of Islamic Civilization: Ibn Khaldun*. New Delhi: Oxford University Press.

Ali, S. (1977). *Intellectual Foundations of Muslim Civilization*. Lahore. United Publishers.

Boulakia, J.D.C. (1971). *Ibn Khaldun: A Fourteenth-Century Economist*. Journal of Political Economy. 79(5): 1105-18. DOI: http://dx.doi.org/10.1086/259818.

Chavan, S.R. and Sonawane, J.S. (2017). *Basic Concepts in Sociology*. New Delhi. R.P. Publications.

Enan, M. A. (1979). *Ibn Khaldun: His Life and Work*. New Delhi. Kitab Bhavan Publishers.

Enan, M.A. (2007). *Ibn Khaldun: His Life and Works*. Canada. The Other Press.

Encyclopedia Britannica. 15th (Eds.). 9(14): URL: https://www.britannica.com/biography/Ibn-Khaldun.

Encyclopaedia Britannica. (May 23, 2020). Ibn Khaldun. Issawi, C. *'Ibn Khaldun: Muslim Historian'*. URL: https://www.britannica.com/biography/Ibn-Khaldun

Hassan, FHJ. (2006). *Ibn Khaldun and Jane Addams: The Real Father of Sociology and the Mother of Social Works*. Madrid. 3(5): 1-23. Google Scholar.

Hodges J.R.H.M. (1971). *An Introduction to Sociology*. London. Harper & Row Publishers.

Hozien, M. (2013). *Ibn Khaldun: His Life and Work. Islamic Philosophy Online. Archived from the original on 2013-09-13. Retrieved from http://www.muslimphilosophy.com/ik/klf.htm.*

*Irwin, R. (2014). Ibn Khaldun: an Intellectual Biography*. US, UK & China. Princeton University Press.

Minoo, S. (1984). *The Negative Images of Blacks in Some Medieval Iranian Writings*. Iranian Studies. 17(1): 15. DOI:10.1080/00210868408701620.

Mohammad, F. (1998). *Ibn Khaldun's Philosophy of Social Change: A Comparison with Hegel, Marx and Durkheim*. American Journal of Islamic Social Sciences. 15(2): 26-45.

Onder, M. and Ulasan, F. (2018). Ibn Khaldun's Cyclical Theory on the Rise and Fall of Sovereign Powers: The Case of Ottoman Empire. (Arastirma Makalesi). *Adam Akademi*. 8(2): 231-266.
DOI: 10.31679/adamakademi.453944

Rameez, A. (2018). *Eurocentrism and the Contribution of Ibn Khaldun to the Growth of Sociology*. Journal of Sustainable Development. 11(6): 2018. 41-46. Canadian Center of Science and Education. DOI:10.5539/jsd.v11n6p41.

Ritzer, G. (2015). *Introduction to Sociology*. Washington D.C. Sage Publishers.

Rosenthal, F. (2005). *Ibn Khaldun: The Muqaddimah – An Introduction to History*. (Translated). London: United Kingdom. Princeton University Press.

Sarah-Bowen, S. and Felipe, H. (Ed). Vol.5. (2014). *Genealogy and Knowledge in Muslim Societies: Understanding the Past*. London. Edinburgh University Press. Available at: Available at: https://ecommons.aku.edu/uk_ismc_series_emc/1.

Shahidipak, D.M. (2020). Ibn Khaldun as a paradigm for the past and future of sociology and humanity. *Sociology International Journal*. 4(5): 153-159.
DOI: 10.15406/sij.2020.04.00240

Simon, R. (2002). *Ibn Khaldun: History as Science and the Patrimonial Empire*. Budapest: Akademia Kaido.

Sorinel, C. (2009). *Ibn Khaldun's Economic Thinking*. Ovidius University Annals of Economics. XIV: 52–57. Ovidius University Press.

Soyer, M. and Gilbert, P. (2012). *Debating the Origins of Sociology: Ibn Khaldun as a Founding Father of Sociology*. International Journal of Sociological Research. 5(1-2); January -December 2012: 13-30.

Spengler, J.J. (1964). *Economic Thought of Islam: Ibn Khaldun*. Comparative Studies in Society and History. 6(3): 268-306. DOI: https://doi.org/10.1017/S0010417500002164.

Stone, C. (2006). *Ibn Khaldun and the Rise and Fall of Empires*. Aramco World: Arab and Islamic Cultures and Connections. September/October 2006: 57(5). Saudi Aramco

World. Retrieved from: https://archive.aramcoworld.com/issue/200605/ibn.khaldun.and.the.rise.and.fall.of.empires.htm.

United Nations. (2006). Encounter Of Civilizations: Ibn Khaldun Exhibit Opens At Headquarters. Press Relase. 14, December 2006. URL: https://www.un.org/press/en/2006/note6056.doc.htm.

Web Source. (15 October, 2020). 'Ibn Khaldun'. URL: https://en.wikipedia.org/wiki/Ibn_Khaldun.

Zaidi, A. (2011). *Islam, Modernity and the Human Sciences*. New York. Palgrave and Macmillan.